**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 23rd day

Saturday the 06th day of June' 2026

Calender Case No.07/2026
CNR No.TNPD01-000282-2026

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | PEW Perambalur P.S. in Cr.No.130/2025 u/**s** 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | Rajiv @ Dalda Kannan |
| 4. | Father's Name /Husband Name | Selvaraj |
| 5. | Occupation | Coolie |
| 6. | Residence | Alambadi Road, New Colony, Perambalur. |
| 7. | Age | 35 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 17.10.2025 |
| 9. | Complaint | 17.10.2025 |
| 10. | Apprehension | 17.10.2025 |
| 11. | Release on bail | 28.11.2025 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 26.05.2026 |
| 14. | closure of trial | 03.06.2026 |
| 15. | Sentence or order | 06.06.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 06.06.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their | --- |

| | | |
|---|---|---|
| | results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 26.05.2026 – 26.05.2026<br>2) 03.06.2026 – 03.06.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 05.06.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 17.10.2025 – 28.11.2025 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 12.01.2026 |

இவ்வழக்கு 05.06.2026–ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு.எம்.செந்தில்குமார்,B.A.,B.L., அவர்கள் முன்னிலை யாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. ஜெயபிரகாஷ், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 17.10.2025–ம் தேதியன்று பெரம்பலூர் ஆலம்பாடி ரோடு சமத்துவபுரம் ஆர்ச் அருகில் இவ்வழக்கின் எதிரி மனிதர்கள் உட்கொண்டால் உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய சுமார் 1.100 கிகி

எடையுள்ள கஞ்சா என்றும் போதைப் பொருளை பிளாஸ்டிக் பையில் உதிரியாகவும் காய்ந்து நொறுங்கிய நிலையில் விதை, இலை, காய், பூ, மொட்டு மற்றும் தண்டுகளுடன் போதை தரக்கூடிய நச்சுத்தச்மைடைய அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா என்னும் போதை பொருளை வைத்துக் கொண்டு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் PEW பெரம்பலூர் காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–**

(i) அசா.1 திரு.அழகுவேல் தனது சாட்சியத்தில் கடந்த 17.10.2025–ம் தேதி பெரம்பலூர் மது விலக்கு அமுலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது மதியம் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு.ஹேமலதா என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சிறப்பு தலைமை காவலர் மாதேஸ்வரன் ஆகியேர்களுடன் வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களுடன் 14.00 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு பெரம்பலூர் ஆலம்பாடி ரோடு சமத்துவபுரம் ஆர்ச் வளைவு அருகே சென்று கண்காணித்தபோது 14.20 மணிக்கு ராஜீவ் என்ற டால்டா கண்ணன் என்பவர் தங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை விரட்டி பிடித்து அவரிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டு விசாரிக்க அவர்கள் கஞ்சா விற்பதாக ஒப்புக் கொண்டார் என்றும், அவரை ஆய்வாளர் ஹேமலதா அவர்கள் சோதனை செய்வதற்கு அவரிடம் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து செல்லலாமா என்று கேட்டபோது அதற்கு அவர் ஆய்வாளரிடம் அங்கெல்லாம் அழைத்து செல்ல வேண்டாம் என்றும் நீங்களே சோதனை செய்யலாம் என்றும் எதிரி விருப்பம் தெரிவித்தார் என்றும், அதன்படி சோதனை சம்மத கடிதத்தை ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அதில் சாட்சிகளாக தானும் த.கா.மாதேஷ்வரன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த சோதனை சம்மத கடிதத்தில் எதிரி கையொப்பம் செய்தார் என்றும், அந்த சோதனை சம்மத கடிதத்திலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 என்றும், பின்பு எதிரி தனது கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை காவல் ஆய்வாளர் பெற்று தங்கள் முன்னிலையில் சோதனை செய்தார் என்றும், அதை சோதனை செய்தபோது அதில் 1 கிலோ 100 கிராம் கஞ்சா இருந்தது என்றும், அதை காவல் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் சாட்சிகளாக தானும் த.கா.மாதேஸ்வரன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த

அத்தாட்சிலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த அத்தாட்சி அதசாஆ.2 என்றும், பின்னர் எதிரிக்கு கைது அறிவிப்பு கொடுத்து காவல் ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் கைது செய்தார் என்றும், அதில் சாட்சிகளாக தானும் த.கா.மாதேஸ்வரன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைது அறிவிப்பில் எதிரி கையொப்பம் செய்தார் என்றும், அந்த கைது அறிவிப்பில் 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கைது அறிவிப்பு அதசாஆ.3 என்றும், பின்பு எதிரியை விசாரிக்க தானாக முன்வந்து 15.30 மணிக்கு எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் சாட்சிகளாக தானும் மாதேஸ்வரனும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.4 என்றும், பின்னர் ஆய்வாளர் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் காவல் நிலைய குற்ற எண்.130/2025 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) NDPS Act–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், தான் உதவியாக சோதனையின் போது உடன் இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திருமதி.ஹேமலதா தனது சாட்சியத்தில் கடந்த 17.10.2025-ம்தேதி நிலைய அலுவலில் இருக்கும்போது 13.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலாளி தன்னிடம் கொடுத்த தகவலில் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் ஆலம்பாடி சமத்துவபுரம், ஆர்ச் அருகே கஞ்சா விற்பதாக தகவலாளி தன்னிடம் நேரில் வந்து தகவல் கொடுத்தார் என்றும், அதனை தான் 13.00 மணிக்கு பொது நாட்குறிப்பில் பதிவு செய்து மது விலக்கு அமலாக்க பிரிவு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அவர்களிடம் முன் அனுமதி பெற்றும் காவல் நிலையத்திலிருந்த தலைமை காவலர் 1018

அழகுவேல் 1660 திரு.மாதேஸ்வரன் தலைமை காவலர் 378 திரு.லெட்சுமணன் ஆகியோர்கள் போலீஸ் பார்ட்டியுடன் ரகசிய தகவலாளியை உடன் அழைத்து கொண்டும் போதை பொருள் சம்பந்தமான உபகரணங்களை எடுத்து கொண்டு நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவ இடத்திற்கு 14.00 மணிக்கு சென்று கண்காணிக்க சுமார் 14.20 மணிக்கு 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் கையில் சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்தார் என்றும், அந்த நபரை தகவலாளி அடையாளம் காட்டி மறைய மேற்படி நபர் காவலர்களாகிய தங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடித்து மது விலக்கு காவல் ஆய்வாளர் என்று தன்னை அறிமுகம்படுத்தியும் மற்ற காவலர்களை அறிமுகம்படுத்தியும் மேற்படி நபரை விசாரிக்க அந்த நபர் அவரது பெயர் டால்டா கண்ணன் என்ற ராஜீவ், ஆலம்பாடி ரோடு என்று தெரிவித்தவரிடம் தாங்கள் கஞ்சா என்ற போதை பொருளை விற்பனை செய்வதாக தங்களுக்கு தகவல் வந்துள்ளது என்றும், தங்களை சோதனை செய்ய வேண்டுமென்று சோதனை சம்மத கடிதம் 14.30 மணிக்கு தயார் செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர்கள் 1460 மாதேஸ்வரன், 1018 அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் மேற்படி நபரிடம் ஒப்புதல் பெற்று நகல் வழங்கினேன் என்றும், எதிரி வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையை சோதனையிட அதில் உதிரியாகவும், காய்ந்து நொருங்கிய நிலையில் விதை, இலை, பூ, மொட்டு, தண்டுடன் கூடிய கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது என்றும், அதிலிருந்து ஒரு சிட்டிகை எடுத்து நெருப்பு வைத்து பார்க்க அதில் கஞ்சா வாடை அடித்தது என்றும், 14.45 மணிக்கு கைது அறிவிப்பு கடிதம் தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடம் ஒப்புதல் பெற்றேன் என்றும், 15.00 மணிக்கு எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து எதிரியிடம் 15.30 மணிக்கு சாட்சிகள் திரு.மாதேஸ்வரன், அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 16.30 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த கஞ்சாவை பிளாஸ்டிக் கவருடன் எடை மிசினில் எடை போட்டு பார்க்க

அதில் 1.100 கிகி அளவு இருந்தது என்றும், சாட்சிகள் திரு.மாதேஸ்வரன், அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் அதனை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும், சோதனை செய்வதற்கான முன் அனுமதி கடிதம் தாக்கல் செய்கிறேன் என்றும், அது அதசாஆ.5 என்றும், எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துடன் 17.30 மணிக்கு காவல் நிலையம் வந்து மது விலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.130/2025 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii) (B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.6 என்றும், பின்னர் எதிரியை நிலைய பாரா வசம் ஒப்படைத்தும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர் தடய சொத்தினை படிவம் 95-ன்படி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றும், அதற்கான படிவம் 95 அதசாஆ.7 என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் த.கா.அழகுவேல், மாதேஸ்வரன், லெட்சுமணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், 18.11.2025-ம் தேதி தலைமை காவலர் திரு.விக்னேஷ் என்பவரை நீதிமன்றத்திலிருந்து தபால் பெற்று தடயத்தை பகுப்பாய்விற்கு திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க கடவு சீட்டு கொடுத்து நடவடிக்கை எடுத்தேன் என்றும், 29.11.2025-ம் தேதி திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட ஆய்வு அறிக்கையை பெற்றேன் என்றும், அந்த பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.8 என்றும், அதற்கான அறிவியல் அலுவலர் திருமதி.கலைவாணி அவர்களை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி பகுப்பாய்வு அறிக்கையை பெரம்பலூர் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்தேன் என்றும், அந்த கஞ்சா என்ற போதை பொருளை மனிதன் பயன்படுத்தினால் மனிதனுக்கு என்னென்ன பின் விளைவுகள் ஏற்படும் என கேள்வி கேட்டு பதில் கடிதம் வேண்டி கடிதம் கொடுத்தேன் என்றும், அதன் அடிப்படையில் பெரம்பலூர் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி திரு.ராம்விவேக் அவர்கள் கொடுத்த மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்கிறேன் என்றும், அது

அதசாஆ.9 என்றும், 24.12.2025-ம் தேதி தலைமை காவலர் திரு.விக்னேஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே தன்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரி டால்டா கண்ணன் என்ற ராஜீவ் என்பவர் மீது சட்டபிரிவு 8(c) r/w 20(b)(ii) (B) of NDPS Act-ன்படி குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், தடய சொத்தினை நீதித்துறை நடுவர் பெரம்பலூர் அவர்கள் மூலமாக Drugs disposal committee மூலம் அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரி அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரி மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின்

சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரியை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திரு.அழகுவேல், தலைமை காவலர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 மூலமாக அசாஆ 1 முதல் 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக திருமதி. ஹேமலதா , காவலர் ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 5 முதல் அசாஆ 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள தலைமைக் காவலர் அழகுவேல் என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 17.10.2025-ம் தேதியன்று 13.00 மணிக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி காவல் ஆய்வாளர் தலைமையில் தானும், பெரம்பலூர் ஆலம்பாடி ரோடு , சமுத்துவபுரம் ஆர்ச்

வளைவு அருகே 14.00 மணிக்கு புறப்பட்டு சென்றும் 14.20 மணிக்கு அங்கு வந்த எதிரி தங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை விரட்டி பிடித்தும், அவரை காவல் ஆய்வாளர் விசாரித்ததாகவும், அப்போது அவரிடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்ய அழைத்து செல்லவா என காவல் ஆய்வாளர் கேட்டதாகவும் , அதற்கு ராஜிவ் என்ற டால்டா கண்ணன் தன்னை வேறு எங்கும் அழைத்து செல்லவேண்டாம் என்றும் காவல் ஆய்வாளரிடம் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் சம்மதம் தெரிவித்ததாகவும் , சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் அதில் எதிரியிடம் கையொப்பம் பெற்றும் எதிரி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை பெற்றும் அதனை சோதனை செய்ததில் அதில் கஞ்சா இருந்ததாகவும் , அந்த கஞ்சாவின் எடை 1.100 கிகி என்றும் அதில் பகுப்பாய்வுக்கென காவல் ஆய்வாளர் மாதிரி எடுத்தும், தடய சொத்தினை அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் கைப்பற்றியதாகவும், முன் வைத்துள்ள சாட்சியம் குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ1 சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரியாகிய உனக்கு சோதனை செய்ய சொல்ல உரிமையுள்ளது என்ற வாசகம் குறிப்பிட்டு காவல் ஆய்வாளரால் சொல்லப்பட்டுள்ளது. அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 50-ன் விதிமுறைகளை முறையாக காவல் ஆய்வாளர் திருமதி. ஹேமலதா இவ்வழக்கு சோதனையில் பின்பற்றியுள்ளது தெரியவருகிறது.

13. மேலும், அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள திருமதி. ஹமேலதா காவல் ஆய்வாளரின் சாட்சியம் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அவர் Raiding and Seizing Officer ஆவார். அவரின்

சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 17.10.2025–ம் தேதியன்று 13.00 மணிக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தகவலாளி ஆஜராகி கொடுத்த தகவலை பெற்றும் அதனை பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் கொடுத்தும், போன் மூலமாக அனுமதி பெற்றும் காவலர்கள் அழகுவேல், மாதேஸ்வரன், லட்சுமணன் ஆகியோர்களுடன் தனது தலைமையில் பெரம்பலூர் ஆலம்பாடி ரோடு , சமுத்துவபுரம் ஆர்ச் வளைவு அருகே 14.00 மணிக்கு புறப்பட்டு சென்றும் 14.20 மணிக்கு அங்கு வந்த எதிரி தங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை விரட்டி பிடித்தும் , அவரை தான் விசாரித்ததாகவும், சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் அதில் எதிரியிடம் கையொப்பம் பெற்றும், எதிரி கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை பெற்றும் அதனை சோதனை செய்ததில் அதில் கஞ்சா இருந்ததாகவும், அந்த கஞ்சாவின் எடை 1.100 கிகி என்றும் அதில் பகுப்பாய்வுக்கென தான் மாதிரி எடுத்தும் தடய சொத்தினை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் முன் வைத்துள்ள சாட்சியம் குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ 1 சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரியாகிய உனக்கு சோதனை செய்ய சொல்ல உரிமையுள்ளது என்ற வாசகம் குறிப்பிட்டு காவல் ஆய்வாளரால் சொல்லப்பட்டுள்ளது . அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 50–ன் விதிமுறைகளை முறையாக காவல் ஆய்வாளர் திருமதி. ஹேமலதா இவ்வழக்கு சோதனையில் பின்பற்றியுள்ளது தெரியவருகிறது. மேலும், அசாஆ 3 கைது அறிவிப்பை எதிரிக்கு கொடுத்தும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு

செய்தும் எதிரி தன் வசம் விற்பனைக்கு வைத்திருந்த பிளாஸ்டிக் பையில் இருந்த 1.100 கிகி கஞ்சாவை அசாஆ 2 அத்தாட்சியின் மூலம் கைப்பற்றியும் உள்ளது அசா1, அசா2 ன் சாட்சியத்தின் பிரகாரம் இயற்கையாகவும், கோர்வையாகவும் ஒன்றாக ஒருசேர அது வகைக்கு எதிரியிடமிருந்து 1.100 கிகி கஞ்சா அசா2 காவல் ஆய்வாளரால் கையும் மெய்யுமாக கைப்பற்றியுள்ளது அசா1, அசா2 –ன் சாட்சியத்தின் பிரகாரமும் அசாஆ 1 முதல் அசாஆ 9 வரையிலான சான்றாவணங்களின் பிரகாரமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது

14. மேலும், அசா2 திருமதி. ஹேமலதாவின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் அசாஆ 1 சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ்பதிவு பெற்ற அதிகாரியிடமோ, அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரிக்கு சோதனை செய்ய உரிமையுள்ளது என்று குறிப்பிட்டு விபரம் தெரிவித்துள்ளார். அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 50–ன் விதிமுறைகள் அசா2 ஆல் முறையாக பின்பற்றப்பட்டும் சட்டமுறைபடிக்கு சோதனை நடவடிக்கை அசா2 ஆய்வாளரால் எடுக்கப்பட்டுள்ளது.

15. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையிலும் அசா1 , அசா2 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ 1 முதல் அசாஆ 9 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையிலும் இவ்வழக்கின் எதிரியானவர் சம்பவ சமயம், சம்பவ இடத்தில் 1.100 கிகி கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி ஒன்றுக்கொன்று

இயற்கையாகவும், கோர்வையாகவும் ஒத்துரைக்கப்பட்டுள்ளது நம்பகத்தன்மை உடைய ஒன்றாக உள்ளது.

16. எனவே, அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி இவ்வழக்கின் எதிரியானவர் சம்பவ சமயம், சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் 1.100 கிகி கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்துள்ளதும் அதனை அசா1 மற்றும் அசா2–ன் சாட்சியத்தின் பிரகாரம் கையும் ,மெய்யுமாக அசா2 காவல் ஆய்வாளர் திருமதி ஹேமலதா அசாஆ 2 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளதும் குறித்து NDPS சட்டப்பிரிவு 54–ன் படி எதிரி சம்பவ சமயம், சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. அந்த அனுமானத்தினை மறுத்துரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும், சான்றாவணமும் முன்னிடப்பட்டிருக்காதது இந்நீதி மன்றத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டது.

17. ஆகவே எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரியிடம் வினவ, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 36 ஆகும். நான் திருந்தி கூலி வேலை செய்கிறேன். என்னை மன்னிக்க வேண்டும். |

ஆகவே, எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2026-ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

18. முடிவாக எதிரி 1985-ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9-01 ச-பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 -ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 43 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/- விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428-ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.
எதிரி 17.10.2025 முதல் 28.11.2025 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் . எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/- ஆகும்.

19. இவ்வழக்கில் கண்ட தடய சொத்தான 50 கிராம் கஞ்சா பாக்கெட்டுக்கள் இரண்டு, 1.000 கிகி கஞ்சா பாக்கெட் மற்றும் சாக்கு கை ஒன்று பொறுத்து அதனை பெரம்பலூர் நீதித்துறை நடுவர் மூலமாக Drugs

Disposal Committee வசம் ஒப்படைத்து மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 06–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM
Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.06.06 15:11:03 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**சாட்சி பட்டியல்–**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

அ.சா.1 – திரு.அழகுவேல், தலைமை காவலர்.

அ.சா.2 – திருமதி.ஹேமலதா, காவல் ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்
அ.சா.ஆ.2 – அத்தாட்சி கைது அறிவிப்பு
அ.சா.ஆ.3 – கைது அறிவிப்பு
அ.சா.ஆ.4 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அசா.1–ன் 2– வது கையொப்பம் மட்டும்
அ.சா.ஆ.5 – முன் அனுமதி கடிதம்
அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.7 – படிவம் 95
அ.சா.ஆ.8 – பகுப்பாய்வு அறிக்கை
அ.சா.ஆ.9 – திரு.ராம்விவேக் அவர்கள் கொடுத்த மருத்துவ அறிக்கை

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** – இல்லை.

<u>**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்**</u>–இல்லை.

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருக்கிறார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.07/2026
Dt.06.06.2026.